ஸ்ரீ சுகுமாரின்
சின்னதுரை
M.S. PICTURES
RELEASE.

# " சின்னதுரை "

## பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| டி. ஆர். மஹாலிங்கம்... | | சின்னதுரை, ராஜாபகதூர், & கோமங்கலம் மைனர். |
| பி. ஆர். பந்துலு | ... | வக்கீல் சோமசுந்தரம் |
| டி. கே. ராமச்சந்திரன் | .... | ராஜகிரி ஜமீன்தார் |
| வி. கே. ராமசாமி | ... | ராஜாசர் கிருஷ்ணன் |
| கே. சாயிராம் | ... | கூத்தன் |
| சந்திரபாபு | ... | ஸெகரட்டரி |
| ஸ்டண்ட் சோமு | ... | காப்டன் சோமு |
| கே. நடராஜன் | ... | சி. ஐ. டி. |
| என். திருவேங்கடம் | ... | போலீஸ் இன்ஸ்பெக்டர் |
| கே. எஸ். ஹரிஹரன் | ... | மிராசுதார் சுந்தரம் பிள்ளை |
| கே. ராமு | ... | மானேஜர் |
| பழூன் சங்கரய்யர் | ... | ஸமஸ்கிருத பண்டிட் |
| கொட்டாபுளி ஜெயராமன் | | வக்கீல் குமாஸ்தா |
| ராமய்யா சாஸ்திரி | ... | ஜோஸியர் |
| எஸ். வரலக்ஷ்மி | ... | இந்திராமணி |
| ஜி. சகுந்தலா | ... | சந்திராமணி |
| எஸ். ஆர். லக்ஷ்மி | ... | சம்பங்கி |
| வேணுபாய் | ... | ருக்மணி |

*மற்றும்* : ஞானகுமாரி, அங்கமுத்து, லூஸ் ஆறுமுகம், குண்டுமேணி, முத்துராமலிங்கம், சீதாராமன், பாண்டியன், கோவிந்தன், மணி, பைரவன் முதலியோர்

நடனம் :

ஸி. ஆர். ராஜகுமாரி, சௌதாமினி & தங்கப்பன்,
சுசீலா, சுலோசனா, தனம், ரீடா,
பாலா, லீலா, ராஜம்

டி. ஆர். மகாலிங்கம் அளிக்கும்

# "சின்ன துரை"

(வடுவூராரின் இருமன மோகினிகள் கதையைத்தழுவியது)

## உற்பத்தியாளர்கள்

| | |
|---|---|
| வசனம், பாட்டுகள்: | கே. டி. சந்தானம் |
| ஒலிப்பதிவு டைரக்ஷன்: | தின்ஷா கே. தெஹ்ராணி |
| ஒலிப்பதிவு: | பி. ஸி. பத்மநாபன் |
| உதவி: | ஸி. கே. கண்ணன் |
| | ஸி. ஜி. பதி |
| போட்டோகிராபி: | எஸ். பகதூர் |
| எடிட்டிங்: | ஆர். தேவராஜன் |
| உதவி: | வி. பி. கிருஷ்ணன் |
| லெபரட்டரி: | டி. ஆர். எத்திராஜ் |
| | ஜி. முத்தையா |
| ஆர்ட் டைரக்ஷன்: | வர்த்துர்க்கர் |
| மேக்கப்: | ராமதாஸ் |
| மியூசிக் டைரக்ஷன்: | டி. ஜி. லிங்கப்பா |
| நடன டைரக்ஷன்: | குமார் |
| ஆடைஅலங்காரம்: | ஸி. வி. ராமன் |
| புரடக்ஷன்: | ஹரிஹரன், திருவேங்கிடம். |
| டைரக்ஷன்: | **டி. ஆர். மகாலிங்கம்** |
| உதவி: | கே. ராமு |
| தயாரிப்பு: | ஸ்ரீ சுகுமார் புரடக்ஷனஸ் |
| ஸ்டுடியோ: | **நியூடோன், சென்னை.** |

(R.C.A. சவுண்ட் ஸிஸ்டத்தில் பதிப்பிக்கப்பட்டது)

| | |
|---|---|
| பின்னணிப் பாடல்கள்: | ரத்னமாலா, ராணி. |

நெகடீவ் உரிமையாளர்.

## M. S. பிக்சர்ஸ்,

ராயப்பேட்டை சென்னை. 14

# கதைச்சுருக்கம்

மோகன புரத்தில் ராஜா சர் கிருஷ்ணன் பெரிய பணக்காரர். அவருக்கு இந்திராமணி, சந்திராமணி என்ற இரண்டு குமார்த்திகள். இருவரும் படித்த நாகரீகப் பெண்கள். அவர்கள் மாதர் முன்னேற்ற சங்கமொன்று நடத்தி வருகிறார்கள். சங்கத்திலிருந்து வந்துக்கொண்டிருந்த சந்திராமணியின் கார் ரிப்பேராகி தவிக்கும் சமயம் அவ்வழியே வந்துக்கொண்டிருந்த ராஜாபகதூர் சந்திராமணியை பார்த்து காதல் கொள்ளுகிறான். வழியில் கண்ட சந்திராமீது காதல் ஏக்கம் கொண்டிருப்பதைக் கண்ட ராஜாபகதூரின் தகப்பனார் சுந்தரம் பிள்ளை தன்பிள்ளைக்கு வேறொரு பெண்ணை கலியாணத்திற்கு ஏற்பாடு செய்கிறார். தகப்பனார் பார்க்கும் பெண்ணை தான் மணக்க முடியாது என்ற விவாதத்துடன் வீட்டைவிட்டு வெளியேறுகிறான்.

ராஜா சர் இளைய குமாரி சந்திராவிற்கு வீணை கற்றுகொடுக்க வேண்டுமென்ற விளம்பரத்தைக் கண்ட ராஜா பகதூர் வீணை உபாத்தியாயராக சென்று அமருகிறான்.

குட்டியூர் ஜமீன்தாரான சின்னதுரை, தமையன் இறந்த விஷயத்தை கேள்வியுற்று இங்கிலாந்திலிருந்து வந்து சேருகிறார். தன்னுடைய அண்ணனை கொலைசெய்த வக்கீல் சோமசுந்திரம் பிள்ளை, ராஜகிரி ஜமீன்தார், கேப்டன் சோமு ஆகிய சதிகாரர்களை சந்திக்கிறார்.

சின்னதுரை இங்கிலாந்திலிருந்து வந்ததையொட்டி வைத்த பாராட்டு விழாவிற்கு ராஜா சர் கிருஷ்ணன் தலைமை வகிக்கிறார். அவ்விழாவில் கலந்துக்கொண்ட ராஜகிரி ஜமீந்தார், இந்திராமணியைக் கண்டதும் மோகிக்கிறார். ராஜாசர் கிருஷ்ணன் மகளுக்கு சமஸ்கிருதம் கற்றுகொடுக்க உபாத்தியாயர் வேண்டுமென்று ராஜகிரி அறிந்து அவர் ஒரு சமஸ்கிருத பண்டிதரை ஏற்பாடு செய்து

சமஸ்கிருத பாடத்துடன் ராஜகிரியின் பிரதாபத்தையும் அவளுக்கு போதிக்குமாறு அனுப்புகிறார். இந்திராமணி யிடம் பண்டிதர் அவமானப்படுகிறார்.

இந்திராமணியின் கலியாண விஷயமாக ராஜகிரி, ராஜாசர் கிருஷ்ணன் வீட்டிற்கு செல்கிறார். அங்கு இந்திராமணி பல கலியாண கண்டிஷன்களைப் போட்டு அவமானப்படுத்தி அனுப்பிவிடுகிறாள்.

அவமானமடைந்த ராஜகிரி தனது ஆட்களை அனுப்பி இந்திராவை தூக்கி வரும்படி அனுப்புகிறார். சென்ற ஆட்கள் இந்திராமணி அறையிலிருந்த சந்திராமணியை கொண்டுபோய்விடவே, ராஜா சர் ரிபோர்ட் செய்யவே போலீஸ் விசாரணை செய்து, ராஜாபகதூர்மேல் சந்தேகம் ஏற்பட இதை கேள்விப்பட்ட ராஜாபகதூர் தலைமறைவாக ஓடி ஒளிந்து திரியும் நாளில் ஓர் தினம் ஒரு ஓட்டலுக்கு போகும்போது சதிக்கூட்டத்தார் கையில் சிக்கிக்கொள் கிறான்.

ஜமீன்தார் சின்னதுரையிடமிருக்கும் புதையல் தஸ்தாவேஜுகளை அபகரிக்க எத்தனிக்கும் வக்கீல் சோம சுந்தரம், ராஜகிரி ஜமீந்தார் கேப்டன் சோமு ஆகியோர்கள் அவரை கொலைசெய்ய திட்டமிடுகிறார்கள். அம்மூவரும் ஓட்டலில் தற்செயலாக சந்தித்த சின்னதுரை சாயலை யுடைய ராஜா பகதூரை தங்கள் சதிக்காளாக்குகிறார்கள் சின்னதுரை தாக்கப்பட்டு சதிகாரர்களால் தனது அண்ணன் கொலையுண்ட அதே கிணற்றில் எறியப்படு கிறார். ராஜா பகதூர் சின்னதுரை வேஷத்தில் ஜமீன் பங்களாவில் சதிக்கூட்டத்தாரால் விடப்படுகிறான்.

சின்னதுரை கதி என்னவாயிற்று ?

அசல் ஜமீன்தார் போனபிறகு ஆக்டிங் ஜமீன்தாராக வந்த ராஜாபகதூர் என்னவானார் ?

கடத்திச்செல்லப்பட்ட சந்திராமணி என்னவானாள்

வெண்திரையில் காணுங்கள்

# " சின்னதுரை "...பாட்டுகள்

1. **கோரஸ்**

எங்கும் இன்பமே, பொங்கும் வண்ணமே,
பண்புடன் தொண்டாற்றிடும் எங்கள் சங்கமே!

எல்லாம் வல்லார் என்று கூறவே—திறம்,
இல்லாத பேதை என்னும் மாசு—தீரவே,
வில்லும் அம்பும் வாளேந்தும், வீரராகவே, (எங்கும்)

உரிமையில்லாத, அடிமைகள் போலே,
ஊமையாகாமல்,
உயர்மிகு உலகில், சரி, நிகராக,
நாமும், வாழ, நல்வழி காண்போம்.

ஒற்றுமை குன்றமல், சற்றும் தயங்காமல்
தலைவரின் சொல் தவறமல்,
ஒருமனதாகவே சேவை செய்குவோம்

உலகம் புகழும், லலித கலைகள்
எதுவும் பயிலுவோம்
உடலும், மனமும் உறுதியடைய
தினமும் முயலுவோம்......

இலகும் எழிலை எந்த நாளும்
வளர்த்துப் போற்றுவோம்
எதிலும் மாதர் திறமை ஆண்கள்
அறிய சாற்றுவோம்...... (எங்கும்)

## 2. ராஜாபகதூர்

### கஜல்

மோன இருள் தீர முத்தொளியை வீசுகின்றாய்
வானில் தவழும் முழு நிலாவே முழு நிலாவே

### பாட்டு

நிலவே நீதான் ஒரு வழி கூறாயோ—மனம்
நிறையும் என்தாபமே, தீராயோ— (நிலவே)

கலைமான் போலே, பெண்காமுறும், வேல் விழியாளே
கணமதிலே, என்மனம், கவர்ந்தே சென்றாளே
காண்பதெவ்வாறோ அறியேன்
அதனாலே தயவாய் (நிலவே)

தாமரை மீதில் நீர்துவி போலே,
தாளாத பேதையாகினேன்,
கனவினி லேனும், என் காதலியின்—பேரெழிலை
காண்போம் என்றால், இருகண்கள் துயிலாதே,
தனிமை நோய்தான், தவிர இனிதாய் துய (நிலவே)

* * *

## 3. ராஜாபகதூர்

### பல்லவி

ஜெகமே நாத மயமே (அகில)

சகல ஜீவர், உயிர்வாழும், அலைசூழும் (ஜெக)

### அநுபல்லவி

சீருயரும் திரு நான்மறையும்,
தெளியும் துய கலையாவும் புகழ்பரவும் (ஜெக)

### சரணம்

காணறிதாம் சுவை மேவியதாம்—வளர்
கைலைநாதன், பொருள் தேடியதாம்,

ஓம் எனும் சொல், வடிவாகி என்னாளும்,
உலாவும், சராசரம், யாவும், புகழ்பரவும் (ஜெக)

* * *

## 4. ராஜாபகதூர்

பல்லவி

திரையே, நீ தூது சொல்லாயோ—என்
குறையாவும் தீர்க்க வல்லாயோ—நீலத் (திரை)

அநுபல்லவி

கரைகாணு, மெய்க்காதல், கடல் மூழ்கி, கரை சேர,
அறியாத எனக்காக சிறிதேனும் தயைசெய்து (திரை)

சரணம்

மாமதி காணாத வான், ஆனேன்
மதுமலர் காணாத, துரும்பானேன்
தாபமும், மதவேளின், கோபமும், இனி என்னால்
சகித்திட முடியாது தவிக்கும் என் நிலை தன்னை (திரை)

செங்கதிரைக்குடையால் மறைப்பது போலே
தென்றலைக் கையால் தடுப்பது போலே
பொங்கிடும் காதலை திரையதனால் மறைக்கும்
புத்தியில்லாச் செய்கையை
பூங்கொடியாள் அறிய (திரை)

* * *

## 5. டான்ஸ்

ஆண்: ஓ...ராகினி...வா...ராகினி

பெண்: ஊ ஹூம் ஹூம், நான் மாட்டேன்
ராவணா ஹே ராவணா...

ஆண்: கண்ணாட்டி என்மீது கோபமா—உன்னை
காணாமல், என் ஆசை தீருமா...

பெண்: வின்னானம் போதும், என்னோடு ஏதும் வீண்
வாதம் செய்யாதே, போ பாவி நீ

ஆண்: ஓ ராகினி...வா ராகினி...

பெண்: ஊ ஹூ ஹூம், நான் மாட்டேன் ராவணா...

* * *

## 6. ராஜாபகதூர் & சந்திரா

ஆண்: ஜெகம் யாவும் காதல் மயமே,
தெய்வீக இன்பமாமே... (ஜெக)

பெண்: தீதில்லாத நாதரூபம், காதலானதுவோ?

ஆண்: திருவாகும், செல்வம், கல்வி
நலம் யாவும் காதலாலே... (ஜெக)
எழிலார் மதிகாணும், கடலும் ஒலிப்பதும் ஏனோ?
இனிய தென்றல் வீசமலர்கள் நகைப்பதும் ஏனோ?

பெண்: தழுவும் ஆசையாலே, கடலும் தரும் அனுராகம்
பழகும் காதலாலே மலரும் பரவசமாகும்—(ஜெக)
என்றுமிலாதென், மனம் ஏதோ
இன்ப வானில் நீந்துவதேன்

ஆண்: இணையிலாத அன்பினாலே
இருவர் மனமும் ஒன்றானதினால்... (ஜெக)

* * *

## 7. ஓட்டல் டான்ஸ்

கஜல்

ஹலோ! குட் இவினிங் ஆல் ஆப் யூ......
ஆனந்தம், மீறுதே உங்களைக் காணும்போது...

பாட்டு

சுகமான மாலை நேரம் இதுவே
குஷியாகப் பாடுவேனே
ஜெகஜ் ஜோதியான ஒளியில் நடனம்
ரதிபோலே ஆடுவேனே...

டென்: அப்படிப்போடு, ராஜா மேலே ராணியை...

கஜல்

சீட்டைப் பிடிக்கின்ற இந்த சீமான்களுக்கே...
என் ஆட்டம் பிடிக்குமோ......

பாட்டு

ரூபா, அணா, பைசா, தானே!
லோகத்துக்கே உயிர் நாடி
பாப புண்ணியம், பார்த்தாலே பணம்
வந்திடுமோ நம்மைத் தேடி

டென்: மிஸ்டர் என்ன இப்படி இருக்கீங்க......

கஜல்

சந்தோஷமே, வாழ்க்கையின் சாரம்......
இங்கு வந்த பின்னும், ஏன் விசாரம்

பாட்டு

பயமே இல்லாமல்—ஜாலியாக
பசி தீர வேலை பாரும்......
சுயமான பாலில்—சூடான காபி
சுவை பார்த்திட்டாலே போதும்... (சுகமான)

## 8. இந்திராமணி

பல்லவி

மஹா வீரமே, பெற வேணுமே,
பாரில், ஜான்ஸி ராணி போலே,
பெண்கள் யாருமே— (மஹா)

அநுபல்லவி

சற்றும் ஈரமில்லா, ஆண்களோடுதான்
வாழ்க்கைப் போரிலே, முன்னேற
எண்ணினால் திண்ணமாய்— (மஹா)

சரணம்

சிறு கூட்டில் வாழும் பறவை போலவே
பெண்ணைப் பூட்டி வைக்கும் மடமை தீரவே
நெஞ்சை வாட்டும் தீமையாவும் மாளவே
இந்த நாட்டின் ஜீவநாடியாகவே. வாழவே......
பாரில் ஜான்ஸி ராணி போலே
பெண்கள் யாருமே— (மஹா)

புதுமையில் ஆர்வமுடன்
உழைத்திட வேணும்
புகழ் பெறவாழும், உரிமை காணவே
அதிநவமான கலைகளும் தேர்ந்தே
அறிவெனும் ஜோதிவீச ஆண்மை வாய்ந்தே-(மஹா)

* * *

## 9. செகரட்டரி

போடா ராஜா பொடி நடையாக
பொழுது போகுதே தெரியலியா

ஈடேயில்லாத மாப்பிள்ளே பெண்ணும்
இருக்கிற நோக்கம் புரியலியா
இருவர் முதுகும் இணைபிரியாமல்
இன்பம் கொண்டாடுவதறியலியா (போடா)

பி. ஜி.

[லகானே வெட்டுகிருன் குதிரை இடக் செய்கிறது]

ஹை—அந்த வேலையெல்லாம்
இனியே வச்சுக்காதேம்மா......

இடக்குச் செய்யாதே இருக்குது சவுக்கு
இடம் பொருள் ஏவல் தெரிஞ்சக்கணும்
இன்னும் பழைய மாதிரி நடந்தா
ஏற்காது விஷயம் புரிஞ்சிக்கணும் (போடா)

* * *

10. இந்திராமணி

ஆருத சோகம் ஆனதுவே
அறியாமையால் என் வாழ்விலே (ஆ)

சீராக வாழும் வகை ஏதும் காணேன்
வேரோடு வீழ்ந்த மரம் போலானேன்
பாரில் எந்தன் லட்சிய மெல்லாம்
பயனேது மில்லா பகற் கனவாகி... (ஆ)

அஞ்சாத நெஞ்சம் அலே மோதலாச்சே
அதிகாரம் ஆண்மை யாவும் போச்சே
பஞ்சுபடாத பாடு பட்டேனே
பன்பே யில்லாத பைத்தியத்தாலே (ஆ)

பிரபாத் பிரஸ், வேலூர்.—போன் 92

எமது

அடுத்த

சமூக
சித்திரம்

?

M.S.
PICTURES

MADRAS-14

எம்.எஸ்.பிக்சர்ஸ், ராயப்பேட்டை-சென்னை-14